# பெற்றோர்களுக்கான தகவல்கள் – விஷேஷ கற்பிக்கும் முறை

**அன்பான பெற்றோர்களே**
ஒரு குறைபாடு உள்ள அல்லது ஒரு முன்னேற்றத்தில் கடுமையான பிரச்சனையுள்ள மாணவிகளுக்கும் மாணவர்களுக்கும் விஷேஷ கற்பிக்கும் முறைக்கான சலுகைகள் இருக்கின்றன. பேசும் சக்தி மனோ ரீதியான குறைபாடு, உடல் –, பார்வை –, கேட்பது – பேசுவதில் (திக்கிப் பேசுதல்) குறைபாடு அதேபோல் புரிந்து கொள்வதில் மந்தம் – நிறமாலை – பிரச்சனை, படிப்பதில் கடுமையான இடையூறுகள் அதோடு பழக்க வழக்கத்தில் (ஒழுக்கம்) பிரச்சனைகள். கீழே நாங்கள் உங்களுக்கு விஷேஷ கற்பிக்கும் முறையின் வேலைகளையும் மேலும் இதோடு சம்மந்தப்பட்ட உங்களுடைய உரிமைகளையும் பற்றி தெரிவிப்போம்.

## எப்போ அதற்கு ஒரு விஷேஷ கற்பிக்கும் முறை தேவைப்படும்?

மாணவி அல்லது மாணவனுக்கு விஷேஷ தேவைகளுக்கான கற்பிக்கும் சலுகைகள் மூலம் வழக்கமான பாடசாலையில் தகுந்த முன்னேற்றம் காணப்படாவிட்டில், ஒரு விஷேஷ கற்பிக்கும் முறை தேவைப்படும்.

ஆரம்பத்தில் எப்பொழுதும் ஒரு பாடசாலை விவகாரங்கள் சம்மந்தமான பேச்சுவார்த்தை நடாத்தப்படும். பெற்றோர்கள், தேவைப்பட்டால் அவர்களினுடைய பிள்ளையுடனும் சேர்ந்து, ஆசிரியர்கள், பாடசாலைக்கான ஒன்றை சரியாக்குவதற்கு தேர்ச்சி பெற்ற ஆசிரியர், வியாதியைக் குணப்படுத்துபவர் (பயிற்சி அளிப்பவர்) அதோடு ஒன்றை சரியாக்குவதில் குழந்தைப் பருவ வளர்ப்புக் கலையில் தேர்ச்சி பெற்றவர் போன்றவர்கள் தற்போதைய நிலையைப் பற்றி பேசி மேலும் உத்தேசிப்பார்கள், ஒருவேளை ஒரு விஷேஷ கற்பிக்கும் முறை தேவையென்றால், அதற்கு ஒரு பாடசாலைக்கான மனோதத்துவ நிபுணர் பரிசோதித்து தெளிவுபடுத்த வேண்டும். ஒரு விஷேஷ கற்பிக்கும் முறை தேவையா என்பதை, இவை சுட்டிக் காட்டும்.

தேவைப்பட்டால் பாடசாலைக்கான மனோதத்துவ ஆலோசனை கொடுப்பவர்கள் வேறு நிபுணர்களை (உதாரணமாக வைத்திய நிபுணர்கள்) அழைக்கலாம். ஒரு இனி வரும் பாடசாலை விவகாரங்கள் சம்மந்தமான பேச்சுவார்த்தையில் பரிசோதித்து தெளிவுபடுத்திய அறிக்கையை பெற்றோருடன் பேசி அதோடு பாடசாலை நிர்வாகம் ஒரு தீர்மானம் எடுப்பார்கள்.

பாடசாலை நிர்வாகம், பாடசாலைக்கான மனோதத்துவ நிபுணர்கள் பரிசோதித்துத் தெளிவுபடுத்திய அறிக்கையை ஆதாரமாகக் கொண்டும் அதோடு பெற்றோர்கள் சொல்வதைக் கேட்டும், விஷேஷ கற்பிக்கும் முறையின் தேவையையும் அதோடு எப்படி நடத்துவது என்பதையும் முடிவுசெய்வார்கள். ஒரு விஷேஷ கற்பிக்கும் முறை தேவைப்படுகின்ற ஒரு மாணவி அல்லது ஒரு மாணவனுக்கு எந்த அளவிற்கு வழக்கமான வகுப்பில் கற்பிக்க முடியும் என்பதை, பாடசாலை நிர்வாகம் இப்போதைய நிலைலை பார்த்து மதிப்பீட்டு முடிவுசெய்வார்கள். அதேநேரம் அவர்கள் பாடசாலைக்கான மனோதத்துவ நிபுணர்கள் பரிசோதித்து தெளிவுபடுத்தியதையும், இயலுமான வேறு நிபுணர்களின் அபிப்பிராயத்தையும் அதேபோல் வழக்கமான வகுப்பில் மதிப்பிட்டதையும் அதோடு சம்மந்தப்பட்ட பிள்ளை அல்லது இளவயதினரின் பெற்றோரின் மதிப்பீட்டையும் பார்த்து உதவிசெய்வார்கள்.

**சலுகை**

விஷேஷ கற்பிக்கும் முறை ஒவ்வொரு பிள்ளை அல்லது இளவயதினரின் தேவைக்கேற்ப வழக்கமான வகுப்பில் சேர்த்தும், ஒரு விஷேஷ பாடசாலை (Tagessonderschule) அல்லது ஒரு மாணவர் தங்கும் விடுதியுடன் கூடிய விஷேஷ பாடசாலையிலும் (Sonderschulheim) நடாத்தப்படும்.

**விஷேஷ கற்பிக்கும் முறையை சேர்த்துச் செய்வது (வழக்கமான வகுப்பில்)**

ஒவ்வொரு மாணவிக்கும் ஒவ்வொரு மாணவனுக்கும் அவரவர்களின் தேவைக்கேற்ப தனிப்பட்ட முறையில் ஒழுங்கு செய்யப்படும். வகுப்பில் கற்பதோடு வழக்கமான வகுப்பாசிரியர் மூலம் கீழ்வரும் உதவிமுறைகளை உபயோகப்படுத்தலாம்ஹ

- மற்றவர்களுடன் சேர்த்து கற்பிப்பது
- தனிய அல்லது சிறிய குழுவாக (கொஞ்சப் பேராக) ஊக்குவிப்பது
- பயிற்சிகள்
- நன்நடத்தைக்கு வழிகாட்டுவது
- தானாக செயல்ப்படுவதை ஊக்குவிப்பவர்கள் மூலம் உதவுவது
- ஆசிரியர்களுக்கும் அதோடு பெற்றோருக்கும் குறிப்பிட்ட பிரச்சனைக்கான நிபுணர்களின் ஆலோசனை

தேவைப்பட்டால் நகரசபையிலுள்ள குறிப்பிட்ட சலுகைகள் சம்மந்தமாக ஒரு பாடசாலைக்குப் பிறம்பான பராமரிப்பிற்கும், அவசியமெனில் மேலதிக உதவி செய்பவர்களையும் ஏற்பாடு செய்யலாம்.

## விஷேஷ பாடசாலை

மாணவி அல்லது மாணவன் விஷேஷ பாடசாலையில் உள்ள ஒரு வகுப்பில் படிப்பார் அதோடு தேவையைப் பொறுத்து பயிற்சிகளும். பாடசாலை ஆரம்பிப்பதற்கு முன் அல்லது பாடசாலை முடிந்த பின் அதேமாதிரி மத்தியானத்திலும் விஷேஷ பாடசாலை திறந்திருக்கும் நேரத்தைப் பொறுத்து ஒரு நன்நடத்தையை சொல்லிக் கொடுப்பதற்கான சலுகைகள் உண்டு. அல்லதுஹ விஷேஷ பாடசாலைகள் அதோடு அது திறந்திருக்கும் நேரத்தைப் பொறுத்து அதிகமாக மத்தியானத்தில் ஒரு கவனித்துப் பார்த்துக் கொள்வதற்கு ஏற்பாடு செய்வார்கள்.

தேவைப்பட்டால் ஒரு மேலதிக பாடசாலைக்குப் பிறம்பான பராமரிப்பிற்கு விஷேஷ பாடசாலையில் அல்லது வசிக்கும் நகரசபையில் ஏற்பாடு செய்யலாம். பிள்ளையால் பாடசாலைக்கு தன்பாட்டில் போய் வர முடியாவிட்டால், ஒரு தகுந்த போக்குவரத்து சாதனம் ஒழுங்கு செய்யப்படும்.

## மாணவர் தங்கும் விடுதியடன் கூடிய விஷேஷ பாடசாலை

மாணவி அல்லது மாணவன் விஷேஷ பாடசாலையில் உள்ள ஒரு வகுப்பில் படிப்பார் அதோடு தேவையைப் பொறுத்து பயிற்சிகளும். பாடசாலையுடன்கூடிய மாணவர் தங்கும் விடுதியில் உள்ள நன்நடத்தையைச் சொல்லிக் கொடுத்து பராமரிப்பவர்கள் பிள்ளை அல்லது இளவயதினரின் தேவைக்கேற்ப வழிகாட்டுவார்கள் (தேவைப்பட்டால் வருடத்தில் 365 நாட்களும்). பிள்ளைக்கு தானே போய் வர முடியாவிட்டால், ஒரு தகுந்த போக்குவரத்து சாதனம் ஒழுங்கு செய்யப்படும்.

## பண விஷயம்

நகரசபையும் அதோடு மாநிலமும் விஷேஷ கற்பிக்கும் முறை, பயிற்சிகள், நன்நடத்தைக்கான பராமரிப்பு (விஷேஷ பாடசாலை திறந்திருக்கும் நேரத்திற்குள்) அதோடு போக்கு வரத்து சாதனம் போன்றவற்றிற்கான செலவுகளை ஏற்றுக்கொள்ளும்.

**பெற்றோர்கள் கீழேயுள்ள செலவுகளை ஏற்றுக்கொள்ள வேண்டும்.**

- மாணவ மாணவியர் பாடசாலையில் உணவுண்டால் பெற்றோரும் செலவில் பங்கேற்க வேண்டும். (பெற்றோருக்கான உணவுக்கட்டண பங்களிப்பு தொடர்பான தகவல்களிற்கு: www.vsa.zh.ch→ பாடசாலைச்சட்டமும் நிதியும்→ பாடசாலைச்சட்டம்→ பரிந்துரைகள், ஒழுங்குமுறைகள், விதிகள்) (www.zh.ch → Finanzen & Infrastruktur → Budgetgrundlagen Gemeinde)
- ஒருங்கிணைந்த விஷேஷ பாடசாலையின் பகுதியாக பாடசாலை தவிர்ந்த வெளியிட பராமரிப்பு செலவுகள் ஏற்படும் போது நகரசபையின் கட்டணவிதிகளிற்கமைய பங்கேற்க வேண்டும்.
- மாணவர் தங்கும் விடுதியடன் கூடிய விஷேஷ பாடசாலை திறந்திருக்கும் நேரம் கடந்து பிள்ளைகளை பராமரிக்கநேர்ந்தால் அதற்கான செலவை நகரசபையின் கட்டணவிதிகளிற்கு அமைய பங்கேற்க வேண்டும்.
- மாணவர் தங்கும் விடுதியடன் கூடிய விஷேஷ பாடசாலையின் பரிந்துரைக்கமைய ஏற்படும் செலவுத்தொகை
  - ஒருங்கிணைந்த விஷேஷ பாடசாலையின் பகுதியாக பாடசாலை தவிர்ந்த வெளியிட பராமரிப்பு செலவுகள் ஏற்படும் போது நகரசபையின் கட்டணவிதிகளிற்கமைய பங்கேற்றல்
  - மாணவர் தங்கும் விடுதியடன் கூடிய விஷேஷ பாடசாலை திறந்திருக்கும் நேரம் கடந்து பிள்ளைகளை பராமரிக்கநேர்ந்தால் அதற்கான செலவை நகரசபையின் கட்டணவிதிகளிற்கு அமைய பங்கேற்றல்
  - மாணவர் தங்கும் விடுதியடன் கூடிய விஷேஷ பாடசாலையின் பரிந்துரைக்கமைய ஏற்படுபவை

**பெற்றோர்களின் உரிமைகள்**

பெற்றோர்கள் குறைந்தது வருடத்திற்கு ஒரு முறை நடைபெறும் பாடசாலை விவகாரங்கள் சம்மந்தமான பேச்சுவார்த்தையில் ஊக்குவிப்பதற்கான திட்டத்தைப் பற்றியும் (குறிக்கோளை அடைவதற்கு ஊக்குவிக்கும் திட்டம்) அதோடு விஷேஷ கற்பிக்கும் முறையையும் ஆராய்வதற்கு ஒத்துழைக்கலாம்.

பெற்றோருக்கு விஷேஷ கற்பிக்கும் முறை ஆரம்பிக்கும் போது இவற்றைப் பற்றி தெரிவிக்கப்படும்
அவர்களுடைய உரிமைகளையும் அதோடு அவர்கள் பங்கெடுத்துக் கொள்வதற்கான வாய்ப்புக்களையும்
வழக்கமான வகுப்புடன் சேர்த்துச் செய்யும் விஷேஷ கற்பிக்கும் முறைக்கான தகுந்த ஏற்பாடுகள் முறையே விஷேஷ பாடசாலையில் உள்ள கல்வி –, பராமரிப்பு – அதோடு பயிற்சிக்கான திட்டம்
இதற்குப் பொறுப்பாக பார்த்துக் கொள்ளும் நிர்வாக சபைகள் (பாடசாலை நிர்வாகம் அல்லது ஏற்பாடு செய்யும் சங்கம் அதோடு சூரிச் மாநிலத்தின் கல்வி நிர்வாக சபை, ஆரம்பப் பாடசாலைக்கான இலாகா, விஷேஷ கல்வித்துறை, தொலைபேசி 043 259 22 91).

பாடசாலை நிர்வாகத்தின் எல்லா தீர்மானங்களையும் பொறுப்பாகவுள்ள மாவட்டசபையில் மேல் முறையீடு செய்யலாம்.

**தகவல்கள் / ஆலோசனை**

விஷேஷ பாடசாலைக்கான பட்டியல் கீழே: www.zh.ch/schulen பாடசாலைமட்டங்களும் பாடசாலைகளும் —பாடசாலைகள்—விஷேஷ பாடசாலைகள்
(www.zh.ch/sonderschulung → Informationen für Sonderschulen)
ஒன்றுசேர்த்து விஷேஷ கல்வி பயில்வதற்கான திட்டம் இதன் கீழே:
www. —பாடசாலை மட்டங்களும் வகுப்புக்களும் —விஷேஷ பாடசாலைகல்வி—விஷேஷ பாடசாலை—ஒருங்கிணைந்த விஷேஷ பாடசாலை
(www.vsa.zh.ch → Schulbetrieb & Unterricht → Sonderpädagogisches → Sonderschulung → intergrierte Sonderschulung)

- Pro Infirmis பெற்றோரிற்கான ஆலோசனை மையம், தொலைபேசி எண். 044 299 44 11, www.proinfirmis.ch
- Procap ஊனமுற்றோருக்கான சட்ட ஆலோசனை, தொலைபேசி எண் 062 206 88 77, www.procap.ch

**குறிப்பிட்ட அங்கவீன ஆலோசனை மையங்கள்**

VSA ஆனது குறிப்பிட்ட அங்கவீன ஆலோசனை மையங்களினது பட்டியலை அங்கவீனவகை / பாடசாலைவகை, இடம் தொடர்பு கொள்ளும் நபர் தொடர்பாக வெளியிட்டுள்ளது.
www.zh.ch/sonderschulung→ பாடசாலை மட்டங்களும் வகுப்புக்களும் → விஷேஷ பாடசாலைகல்வி—விஷேஷ பாடசாலை—விஷேஷ பாடசாலையில் இளைஞர்களிற்கான தொழில்க்கல்வித்தேர்வும் வாழ்க்கைத்தயாரிப்பும்—ஆலோசனையும் உதவியும்
(www.vsa.zh.ch → Schulbetrieb & Unterricht → Sonderpädagogisches → Sonderschulung → Berufswahl- und Lebensvorbereitung von Jugendlichen in der Sonderschulung → Beratung und Unterstützung)